# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

CEYLON GOVERNMENT GAZETTE No. 6,418, DECEMBER 30, 1910.

## TAMIL TRANSLATIONS OF NOTIFICATIONS.

[Proclamation relating to amendment of Municipal By-laws, Galle.]

பெரிய பிரித்தானும் அயர்லாந்துமாகிய ஐக்கிய இராட்சியத்துக்கும் கடலுக்கப்பாலுள்ள பிறிட்டிஷ் அதிபத்திய நாடுகளுக்கும் இராசாவும் சமயபரிபாலகருமாகிய மகத்துவநாயக ஐந்தாம் ஜோர்ச் அவர்களின் நாமத்தினாலே:

மகாமேன்மைபொருந்திய சென்மைக்கேல் அன் சென் ஜோர்ஜின் வரிசையின் கிராண்டு குரோஸ் நயிட் பட்டவர்த்தனரும் இலங்கைக்கும் அதைச்சேர்ந்த நாடுகளுக்கும் தேசாதிபதியும் சேனாதிபதியும் ஆகிய உத்தமனார் சேர் ஹென்றி எட்வட் மக்கலம் அவர்கள் செய்யும்

விளம்பரம்.

ஹென்றி மக்கலம்.

காலி நகராதிகார சங்கத்தாராற் செய்யப்பட்ட துணைப்பிரமாணங்களின் 6 ம் அதிகாரத்தினுள்ளவைகளும் 1903 ம் ஆண்டு ஜனவரிமீ 21 ந் தேதியில் விளம்பரிக்கப்பட்டவைகளுமாகிய துணைப்பிரமாணங்களானவை, இதனோடு அணைத்திருக்கும் அட்டவணையிற் காட்டப்பட்டவைகளும், இனிமேல் முறையே 30 ம், 31 ம், 32 ம் துணைப்பிரமாணங்களென அறியப்படுபவைகளுமாகிய துணைப்பிரமாணங்களைச் சேர்ப்பதினால், திருத்திப் புதுப்பிக்கப்பட்டிருக்கின்றபடியால்;

மேற்சொன்ன இலங்கைத் தேசாதிபதியாகிய நாம், "1910 ம் ஆண்டின் (6 ம் இலக்க) நகராதிகார சட்டத்தின்" 109 ம் பிரிவின் (3) ம் கீழ்ப்பிரிவினால் நம்மீது வைக்கப்பட்ட தத்துவத்தைச் செலுத்தியும், அதிகார மந்திரசபையாரது ஆலோசனையோடும், இதனோடு அணைத்திருக்கும் அட்டவணையிற் காட்டிய மேற்படி துணைப்பிரமாணங்களை இத்தாற் பெலப்படுத்தி விளம்பரிக்கிறோம் என்றும், 1910 ம் ஆண்டு மீ தேதி முதலாகவும் அதன்பின்பும் அவை வழங்கப்படுமென்று வெளிப்படுத்துகிறோமென்றும், நீவிர் அறிந்துகொள்வீராக.

எங்கள் ஆண்டவரின் வருஷம் ஆயிரத்துத் தொளாயிரத்துப் பத்தாம் ஆண்டு டிசெம்பர்மாசம் இருபதாந் தேதியாகிய இத்தினத்திலே, மேற்படி இலங்கைத்தீவிலே, கொழும்பிலே கொடுக்கப்பட்டது.

உத்தமனாரவர்கள் கட்டளைப்படி,
எச். எல். கிறுவ்வோட்,
அக்றிங் கலோனியல் சக்கிறுத்தார்.

இராசாவைத் தேவன் ரக்ஷித்தருள்க.

---

சுட்டிய அட்டவணை.

VI. ம் அதிகாரத்திற் சேர்க்கவேண்டிய துணைப்பிரமாணங்கள்.

மேற்படி கடைகள் தாபித்தலும் நடத்துதலும்.

**30.** எவ்விதமான வள்ளங்களில் பிடித்தாவது நகரசங்க எல்லைக்குள் கடல் அருகில் கரையிடும் புது மீன்கள் உடையவர் காலிக் கடையிலிருக்கும் மீன் ஏலத்தலத்துக்கு கொண்டுபோக கடமை.

**31.** அப்படிக் கொண்டுவரும் மீன்களை ஏலத்தலத்தில் குத்தகைக்காரர்களால் விற்று வருமதியில் நூத்துக்கு நாலு வீதம் ஏலக்காரர்களுக்கு அறவிட தத்துவமிருக்கிறது.

**32.** முன்சொல்லப்பட்ட பிரகாரம் ஏலத்தில் விப்பனவுபண்ணுத எந்தவித புது மீன்களை காலி நகரசங்க எல்லைக்குள் நகரசங்க தலைவரால் உத்தரவு இல்லாமல் விற்பனவுபண்ணக்கூடாது.

---

## LAND SALES.

காணி விற்பனவுகள்.

**No. 620, N. P.**—1911 ம் ஆண்டு மாசிமாதம் 7 ந் திகதி, செவ்வாய்க்கிழமை, காலமே 11 மணியளவில், தன் ஆபிசில் வடமாகாணத்து கவண்மேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம், விற்கப்படும் அல்லது உரித்து முடிவுசெய்யப்படும். 10 காணித்துண்டுகள், வடமாகாணத்து யாழ்ப்பாண டிஸ்திறிக்கின் யாழ்ப்பாணம், தென்மராட்சி, பூனகரி, பச்சிலைப்பளிப் பகுதிகளிலிருக்கின்றது.

பிளான் இலக்கம் 3,527. உரித்தாளி—அரசாட்சி.

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. றூ. ப. | ஏக்கரொன்றுக்கு பாணிப்புவிலை ரூ. |
|---|---|---|---|---|---|
| 13188 | வண்ணார்பண்ணை | ஏ. தம்பு | பீக்குளம் | 0 1 11 | 320 |
| | | பிளான் இலக்கம் 3,599. | | | |
| 13395 | சரசாலை | கந்தர்வீரகத்தியும் வேறு நால்வரும் கூட்டிச்சேர்த்த நிலம் | புகையிலைத்தோட்டம் | 0 0 10 | 20 |

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. றூ. ப. | | | ஏக்கரொன்றுக்கு பாணிப்புவிலை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | | பிளான் இலக்கம் 3,616. | | | | | |
| 13446 | மட்டுவில்நாடு | எஸ். சின்னையா கூட்டிச்சேர்த்தது | புகையிலைத்தோட்டம் | 0 | 0 | 2·15 | 20 |
| 13447 | ஷை | எம். கனகசபை கூட்டிச்சேர்த்தது | ஷை | 0 | 0 | 2·50 | 20 |
| 13449 | ஷை | பீ. சரவணே கூட்டிச்சேர்த்தது | ஷை | 0 | 0 | 2·15 | 20 |
| 13451 | ஷை | எஸ். சின்னையா கூட்டிச்சேர்த்தது | ஷை | 0 | 0 | 1·75 | 20 |
| 13454 | ஷை | எஸ். சின்னையாவும் மறுபேரும் கூட்டிச்சேர்த்தது | — | 0 | 0 | 22·50 | 20 |
| 13443 | ஷை | எம். கனகசபை கூட்டிச்சேர்த்தது | ஷை | 0 | 0 | 3·81 | 20 |
| 13445 | ஷை | எஸ். கந்தையாவும் மறுபேரும் கூட்டிச்சேர்த்தது | ஷை | 0 | 0 | 3·31 | 20 |
| | | ஒடுக்குப்பணம்கட்டத்தவறிய நிலம். | | | | | |
| | | பிளான் இலக்கம் 3,570. உரித்தாளி—சின்னன் இளையவன் வாங்கின காணி. | | | | | |
| 13309 | சங்கத்தார் வயல் | — | தோட்டம் | 1 | 1 | 14 | 20 |

இக்காணிகளைப்பற்றிய மேலதிக விபரங்கள் வடமாகாணத்து கவுண்மேந்து ஏசன்றரிடத்திலும் பட்டினைப்பற்றி அளவுகந்தோரின் பெரியதுரையிடத்திலும் அறிந்துகொள்ளலாம்.

கொலோனியல் சக்கிறுத்தார் ஆபிசில்,
கொழும்பில், 1910 ம் ஸு மார்கழிமீ 20 ந் உ.

எச். எல். கிறுவ்பொர்டு,
கலோனியல் சக்கிறுத்தாரின் வேலைபார்ப்பவர்.

## LAND ACQUISITION NOTICES.

### அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

[Balangoda, Ratnapura District.]

1876 ம் ஸு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பள்ளிக்கூடதோட்டத்திற்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 1,914. குறிச்சி—வலாங்கொடை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. றூ. பே. | | |
|---|---|---|---|---|---|---|
| X | மகாவலகொடகேன | வெளிநிலம் | கே. டி. சில்வாவும் மறுபேரும் | 1 | 0 | 24·25 |
| 52 | பள்ளிக்கூடத்தோட்டம் | தோட்டமும் கட்டிடமும் | — | 0 | 0 | 9·68 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1911 ம் ஸு மாசிமாசம் 20 ந் தேதியிலன்று 1 மணிக்கு இரத்தினபுரிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

இரத்தினபுரிக் கச்சேரி,
1910 ம் ஸு மார்கழிமீ 22 ந் உ.

ஜீ. கூக்சன்,
அரசாட்சி ஏசண்டு.

[Tender for provisioning Hospitals, Avisawella, Neboda, &c.]

கீழ்சொல்லப்பட்ட ஆசுபத்திரிகளுக்கு 1911 ம் ஆண்டு ஆடிமீ 1 ந் திகதி துவக்கம் 1912 ம் ஆண்டு ஆனிமீ 30 ந் திகதி வரைக்கும் தேவையான சாப்பாட்டுச் சாமான்களைக் கொந்திருத்து ஒப்பந்தம்செய்யவிருப்பமுள்ளவர்கள் வெவ்வேறு ஒப்பந்தக் கேள்விக்கடதாசி அனுப்பும்படி இத்தால் கேள்கப்பட்டிருக்கின்றது.

2. கொந்திருத்து ஒப்பந்தக்கேள்விகளை இரண்டு கொப்பிகளில் எழுதி ஒரே தபாலுறையில் வைத்து முத்திரையிட்டு, "கொந்திருத்து ஒப்பந்த விசாரணைச் சங்கத்தலைவர் (The Chairman of the Tender Board) அரசிறைவருமானத் தலைவர் கந்தோர் (Office of the Controller of Revenue) கொழும்பு" என்று மேல்விலாசமும் எழுதி அனுப்பல் வேண்டும்.

3. கேள்விக்கடுதாசிகளை அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் பெட்டியிற் போடவேண்டும் அல்லது தபால்மார்க்கமாய் அங்கே அனுப்பவேண்டும்.

4. கேள்விக்கடதாசிகள் அனுப்பப்படும் உறையின் புறத்தில் இடது கை மேல்மூலையிற் "ஆசுபத்திரிக்குச் சாப்பாட்டுச் சாமான்கள் கொடுத்தற்காக அனுப்பப்படும் ஒப்பந்தக் கேள்விக்கடுதாசி" என்று எழுதல் வேண்டும். கேள்விக்கடுதாசிகள் அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் 1911 ம் ஸு தைமீ 10 ந் தேதி மத்தியானத்துக்குப் பிந்தாமல் சேரல்வேண்டும்.

5. அச்சிட்ட கொந்திருத்து ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகளில் மாத்திரம் ஒப்பந்தக் கேள்விகள் எழுதி அனுப்ப வேண்டும். இந்தக் கேள்விப்பத்திரங்கள் கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபீசில் பெற்றுக்கொள்ளலாம். அச்சிட்டு இதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரத்தில் எழுதப்படாத கேள்விகள் கவனிக்கப்படமாட்டா. இந்தக் கேள்விப்பத்திரத்தில் யாதேனும் மாற்றங்கள் செய்தால் அம்மாற்றங்களுக்கு ஒப்பந்தக் கேள்விக்காரன் கையொப்பமிடல் வேண்டும். அப்படிச்செய்யத் தவறினால் கேள்வி சரியீனமாகக்கண்டு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. அச்சிட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் முற்பணம் கீள்சொல்லப்பட்டபடி கச்சேரியில் கட்டிப் பற்றுச்சீட்டுக் கொண்டுவரல் வேண்டும். கொந்திருத்துக் கேள்விகள் எழுதியனுப்பினதின்மேல் யாராகுதல் கொந்திருத்தைக் கையேற்க அல்லது தக்கபிணை கொடுக்கத் தவறினால், அவரால் முற்பணமாகக் கட்டப்பட்ட காசு முடிக்காய் விடும். அப்படி கட்டப்பட்ட கொந்திருத்துக்காரனின்பேர் கவண்மேந்தில் யாதொரு கொந்திருத்தும் எடுக்க ஏலாமல் அரசாட்சியாரின் பத்திரிகையில் (Defaulting List) போடப்படும் கொந்திருத்து ஒப்பந்தந் தீர்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரன் கையொப்பம் வைத்ததன்மேல், ஒத்துக்கொள்ளப்படாத மற்றக் கொந்திருத்துக் கேள்விக்காரர் கட்டிய பணத்தொகை முழுவதும் அவர்களுக்குக் கொடுக்கப்படும்.

7. சாமான் மாதிரிகள் கேட்கும்போது கொடுக்கவேண்டும்.

8. ஏற்றுக்கொள்ளப்பட்ட கொந்திருத்து ஒப்பந்தக்காரன் பணப்பிணையில் கீழ் சொல்லப்பட்டபடி கொடுக்கவும் ஒப்பந்தத்தைச்சேர்ந்த உறுதிக்குக் கையொப்பம்வைக்கவும் வேண்டும். கேள்விப்பத்திரத்தின்பேரால் முற்பணமாகக் கட்டிய தொகை பிணையில் ஓர் பகுதியாகக் கவனிக்கப்படும். இன்னும் தேவையான விவரங்கள் பிரதான சிவில்மெடிக்கல் ஆபீசரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

9. மேற்கூறிப்போந்த பொருத்தங்கள் எல்லாவற்றிற்கும் அமையாத ஒப்பந்தக்கேள்வி ஒன்றும் அங்கீகரிக்கப்படமாட்டாது.

10. ஒப்பந்தக்கேள்விகளில் யாதேனும் ஒன்றையாவது அல்லது முழுமையையாவது ஏற்றுக்கொள்ளாது தள்ளும் உரித்தும் அவைகளில் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரித்தும் கவண்மேந்தாருக் குண்டு.

11. இன்னும் தேவையான விவரங்களை கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசரிடம் பெற்றுக்கொள்ளலாம்

(கையொப்பம்) சீ. தீ. கிறிவ்வின்,
பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசருக்காக.

கொழும்பு, 1910 ம் ஆண்டு மார்கழிமீ 13 ந உ.

---

| ஆசுப்பத்திரியின் பெயர். | சாப்பாடுச்சாமானின் வகை. | முற்பணத்தின் தொகை. ரூ. | ச. | பிணையின் தொகை. ரூ. | ச. |
|---|---|---|---|---|---|
| அவிசாவலை | சமைத்த சாப்பாடு பாலுடன் | 200 | 0 | 400 | 0 |
| நாபடை | ஷை | 200 | 0 | 400 | 0 |
| பெல்தொட்டா | ஷை | 200 | 0 | 400 | 0 |
| டிக்கோயா | சமைத்த சாப்பாடு பால்விட்டு அல்லது சேர்த்து | 500 | 0 | 1,000 | 0 |
| டிம்புலா | ஷை | 200 | 0 | 400 | 0 |
| டொலஸ்பாகை | சமைத்த சாப்பாடு பாலுடன் | 100 | 0 | 200 | 0 |
| கெலபோககே | ஷை | 200 | 0 | 400 | 0 |
| விண்டுலா | சமைத்த சாப்பாடு பாலுடன் அல்லது விட்டு | 300 | 0 | 600 | 0 |
| மஸ்கெலியா | சமைத்த சாப்பாடு பாலுடன் | 200 | 0 | 400 | 0 |
| மாதுரட்டை | சமைத்த சாப்பாடு பாலுடன் அல்லது விட்டு | 200 | 0 | 400 | 0 |
| நாவலப்பிட்டி | சமைத்த சாப்பாடு | 300 | 0 | 600 | 0 |
| புசலாவ | ஷை | 100 | 0 | 200 | 0 |
| றம்பொடை | ஷை | 200 | 0 | 400 | 0 |
| தெல்டேனியா | ஷை | 100 | 0 | 200 | 0 |
| உடப்புசலாவை | ஷை | 100 | 0 | 200 | 0 |
| டெனியாய | ஷை | 200 | 0 | 400 | 0 |
| அப்புத்தல | சமைத்த சாப்பாடு பாலுடன் அல்லது விட்டு | 200 | 0 | 400 | 0 |
| ஹுணகல | சமைத்த சாப்பாடு பாலுடன் | 200 | 0 | 400 | 0 |
| பலாங்கொடை | ஷை | 400 | 0 | 800 | 0 |
| கரவனெலா | ஷை | 500 | 0 | 1,000 | 0 |
| றக்குவானை | ஷை | 300 | 0 | 600 | 0 |

---

[Tender for supplying Milk to Gampola, Maturata, and Haputale Hospitals.]

கம்பளை மாதுரட்டை அப்புத்தலை ஆசுப்பத்திரிகளுக்கு 1911 ம் ஆண்டு ஆடிமீ 1 ந் தேதி துலக்கம் 1912 ம் ஆண்டு ஆனிமீ 30 ந் தேதி வரைக்கும் பசுப்பால் கொடுக்க கொந்திருத்து ஒப்பந்தம்செய்ய விருப்பமுள்ளவர்கள் ஒவ்வொரு ஆசுப்பத்திரிக்கும் தனித்தனி ஒப்பந்தக் கேள்விக்கடுதாசி அனுப்பும்படி இத்தால் கேட்கப்பட்டிருக்கின்றது.

2. கொந்திருத்து ஒப்பந்தக்கேள்விகளை இரண்டு கொப்பிகளில் எழுதி ஒரே தபாலுறையில் வைத்து முத்திரையிட்டு, பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசர் என்று மேல்விலாசம் எழுதி அனுப்பல் வேண்டும்.

3. கேள்விக்கடுதாசிகளை பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசர் கந்தோரில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் பெட்டியிற் போடவேண்டும் அல்லது தபால் மார்க்கமாய் அங்கே அனுப்பவேண்டும்.

4. கேள்விக்கடுதாசிகள் அனுப்பப்படும் உறையின் புறத்தில் இடது கைமேல்மூலையில் " ஆசுப்பத்திரிக்குப் பசுப்பால் கொடுத்தற்காக அனுப்பப்படும் ஒப்பந்தக் கேள்விக்கடுதாசி " என்று எழுதல்வேண்டும், கேள்விக்கடுதாசிகள் பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசர் கந்தோரில் 1911 ம் ௵ தைமீ 17 ந் திகதி மத்தியானத்துக்குப் பிந்தாமல் சேரல் வேண்டும்.

5. அச்சிட்ட கொந்திருத்து ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகளில் மாத்திரம் ஒப்பந்தக் கேள்விகள் எழுதி அனுப்ப வேண்டும். இந்தக் கேள்விப்பத்திரங்கள் கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபீசில் பெற்றுக்கொள்ளலாம். அச்சிட்டு இதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரத்தில் எழுதப்படாத கேள்விகள் கவனிக்கப்பட மாட்டா. இந்தக்கேள்விப்பத்திரத்தில் யாதேனும் மாற்றங்கள்செய்தால் அம்மாற்றங்களுக்கு ஒப்பந்தக்கேள்விக்காரன் கையொப்பமிடல் வேண்டும். அப்படிச் செய்யத்தவறினால் கேள்வி சரியீனமாகக் கண்டு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. அச்சிட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் ஒவ்வொருவரும் ஐம்பது ரூபா முற்பணமாகக் கச்சேரியில் கட்டிப் பற்றுச்சீட்டுக் கொண்டுவரல் வேண்டும். கொந்திருத்துக் கேள்விகள் எழுதியனுப்பினதன்மேல் யாராகுதல் கொந்திருத்தைக் கையேற்க அல்லது தக்கபிணை கொடுக்கத் தவறினால், அவரால் முற்பணமாகக் கட்டப்பட்ட காசு முடிக்காய்விடும். அப்படி கட்டப்பட்ட கொந்திருத்துக்காரனின் பேர் கவண்மேந்தில் யாதொரு கொந்திருத்தும் எடுக்க ஏலாமல் அரசாட்சியாரின் பத்திரிகையில் (Defaulting List) போடப்படும் கொந்திருத்து ஒப்பந்தந் தீர்ந்து ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரன் கையொப்பம் வைத்ததன்மேல், ஒத்துக்கொள்ளப்படாத மற்றக்கொந்திருத்துக் கேள்விக்காரர் கட்டிய பணத்தொகை முழுவதும் அவர்களுக்குக் கொடுக்கப்படும்.

7. ஏற்றுக்கொள்ளப்பட்ட கொந்திருத்து ஒப்பந்தக்காரன் பணப்பிணை ரூபா நூறு கொடுக்கவும் ஒப்பந்தத்தைச் சேர்ந்த உறுதிக்குக் கையொப்பம் வைக்கவும் வேண்டும். கேள்விப்பத்திரத்தின்பேரால் முற்பணமாகக் கட்டிய தொகை பிணையில் ஓர் பகுதியாகக் கவனிக்கப்படும். இன்னும் தேவையான விவரங்கள் பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

8. மேற்கூறிப்போந்த பொருத்தங்கள் எல்லாவற்றிற்கும் அமையாத ஒப்பந்தக்கேள்வி ஒன்றும் அங்கீகரிக்கப்படமாட்டாது.

9. ஒப்பந்தக்கேள்விகளில் யாதேனும் ஒன்றையாவது அல்லது முழுமையையாவது ஏற்றுக்கொள்ளாது தள்ளும் உரித்தும் அவைகளில் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரித்தும் கவர்ணமேந்தாருக்குண்டு.

10. இன்னும் தேவையான விவரங்களை கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

(கையொப்பம்) சீ. தீ. கிறிவ்வின்,
பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசருக்காக.

கொழும்பு, 1910 ம் ஆண்டு மார்சுழிமீ 20 ந உ.

[Tender for supplying Milk to Dikoya, Dimbula, and Badulla Hospitals.]

1. டிக்கோயா, டிம்புல, பதுல ஆசுப்பத்திரிகளுக்கு 1911 ம் ஆண்டு ஆடிமீ 1 ந் திகதி துவக்கம் 1912 ம் ஆண்டு ஆனிமீ 30 ந் திகதி வரைக்கும் பசும்பால் கொடுக்க கொந்திருத்து ஒப்பந்தம்செய்ய விருப்பமுள்ளவர்கள் ஒவ்வொரு ஆசுபத்திரிக்கும் தனித்தனி ஒப்பந்தக் கேள்விக்கடதாசி அனுப்பும்படி இத்தால் கேட்கப்பட்டிருக்கின்றது.

2. கொந்திருத்து ஒப்பந்தக் கேள்விகளை இரண்டு கொப்பிகளில் எழுதி ஒரே தபாலுறையில் வைத்து முத்திரையிட்டு, "கொந்திருத்து ஒப்பந்த விசாரணைச் சங்கத்தலைவர் (The Chairman of the Tender Board) அரசிறைவருமானத்தலைவர் கந்தோர் (Office of the Controller of Revenue) கொழும்பு" என்று மேல்விலாசமும் எழுதி அனுப்பல் வேண்டும்.

3. கேள்விக்கடுதாசிகளை அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் பெட்டியிற் போடவேண்டும் அல்லது தபால்மார்க்கமாய் அங்கே அனுப்பவேண்டும்.

4. கேள்விக்கடுதாசிகள் அனுப்பப்படும் உறையின் புறத்தில் இடதுகை மேல்மூலையில் "ஆசுபத்திரிக்குப் பால் கொடுத்தற்காக அனுப்பப்படும் ஒப்பந்தக் கேள்விக்கடுதாசி" என்று எழுதல் வேண்டும். கேள்விக்கடுதாசிகள் அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் 1911 ம் ஆண்டு தைமீ 17 ந் திகதி மத்தியானத்துக்குப் பிந்தாமல் சேரல்வேண்டும்.

5. அச்சிட்ட கொந்திருத்து ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகளில் மாத்திரம் ஒப்பந்தக் கேள்விகள் எழுதி அனுப்ப வேண்டும். இந்தக் கேள்விப்பத்திரங்கள் கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபீசில் பெற்றுக்கொள்ளலாம். அச்சிட்டு இதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரத்தில் எழுதப்படாத கேள்விகள் கவனிக்கப்படமாட்டா. இந்தக் கேள்விப்பத்திரத்தில் யாதேனும் மாற்றங்கள் செய்தால் அம்மாற்றங்களுக்கு ஒப்பந்தக் கேள்விக்காரன் கையொப்பமிடல் வேண்டும். அப்படிச் செய்யத்தவறினால் கேள்வி சரியீனமாகக்கண்டு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

6. அச்சிட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் ஒவ்வொருவரும் 50 ரூபா முற்பணமாகக் கச்சேரியில் கட்டிப் பற்றுச்சீட்டுக் கொண்டுவரல் வேண்டும். கொந்திருத்துக் கேள்விகள் எழுதியனுப்பினதன்மேல் யாராகுதல் கொந்திருத்தைக் கையேற்க அல்லது தக்கபிணை கொடுக்கத் தவறினால், அவரால் முற்பணமாகக் கட்டப்பட்ட காசு முடக்காய்விடும். அப்படி கட்டப்பட்ட கொந்திருத்துக்காரனின்பேர் கவண்மேந்தில் யாதொரு கொந்திருத்தும் எடுக்க ஏலாமல் அரசாட்சியாரின் பத்திரிகையில் (Defaulting List) போடப்படும் கொந்திருத்து ஒப்பந்தந் தீர்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரன் கையொப்பம் வைத்ததன்மேல், ஏற்றுக்கொள்ளப்படாத மற்றக் கொந்திருத்துக் கேள்விக்காரர் கட்டிய பணத்தொகை முழுவதும் அவர்களுக்குக் கொடுக்கப்படும்.

7. ஏற்றுக்கொள்ளப்பட்ட கொந்திருத்து ஒப்பந்தக்காரன் பணப்பிணை ரூபா நூறு கொடுக்கவும் ஒப்பந்தத்தைச் சேர்ந்த உறுதிக்குக் கையொப்பம் வைக்கவும் வேண்டும். கேள்விப்பத்திரத்தின்பேரால் முற்பணமாகக் கட்டிய தொகை பிணையில் ஓர் பகுதியாகக் கவனிக்கப்படும். இன்னும் தேவையான விவரங்கள் பிரதான சிவில் மெடிக்கல் ஆபீசரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

8. மேற்கூறிப்போந்த பொருத்தங்கள் எல்லாவற்றிற்கும் அமையாத ஒப்பந்தக் கேள்வி ஒன்றும் அங்கீகரிக்கப்பட மாட்டாது,

9. ஒப்பந்தக்கேள்விகளில் யாதேனும் ஒன்றையாவது அல்லது முழுமையையாவது ஏற்றுக்கொள்ளாது தள்ளும் உரித்தும் அவைகளில் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரித்தும் கவர்ணமேந்தாருக்குண்டு.

10. இன்னும் தேவையான விவரங்களை கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

(கையொப்பம்) சீ. டீ. கிறிவ்வின்,
பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசருக்காக.

கொழும்பு, 1910 ம் ஆண்டு மார்கழிமீ 20 ந் உ.

H. C. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.